# முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , ஈரோடு

# O.S.No.163/2020

2026 ஆம் வருடம் மார்ச் மாதம் 3ம் தேதியன்று **PW.3** ஆக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டு 54வது சட்டத்திலுள்ள பிரிவு (7ன்படி) **திருமதி.S.எழில்,M.L.,** முதலாம் கூடுதல் மாவட்ட நீதிபதி, ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஸ்டெனி | --- | : |
| தந்தை /கணவர் பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூக்கா | : | மாவட்டம் | : |

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை :**

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பெயரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் ICICI வங்கி ஈரோடு மெயின் பிராஞ்சில் Relationship Manager ஆக பணிபுரிகிறேன். எங்கள் வங்கியல் டாக்டர்.ராஜ்குமார் என்பவர் கணக்கு வைத்துள்ளார். அவருடைய வங்கி கணக்கில் இருந்து 22.8.2017 அன்று ரூ.5 லட்சம் காசோலை மூலம் withdrawal செய்துள்ளார். 23.8.2017 அன்று காசோலை மூலம் ரூ.495000/- withdrawal செய்துள்ளார். அது **சாசாஆ** 1. காசோலை மூலம் Mandate holder எடுத்துள்ளார் அவர் பெயர் ஞாபகத்தில் இல்லை. ராஜ்குமாரின் மனைவி கற்பகம் ராஜ்குமார் எங்கள் வங்கியில் கணக்கு வைத்துள்ளார். கற்பகம் ராஜ்குமார் வங்கி கணக்கில் இருந்து 22.8.2017 அன்று ரூ.5 லட்சம் காசோலை மூலம் எடுக்கப்பட்டுள்ளது. ரூ.245000/- ல் 23.8.2017 அன்று காசோலை மூலம் எடுக்கப்பட்டுள்ளது. அது **சாசாஆ** 2. அந்த காசோலை மூலம் Mandate holder எடுத்துள்ளார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஈரோடு வங்கி கிளைக்கு மாற்றம் ஆகி வந்து 8 மாதம் ஆகிறது. சம்மன்

வங்கி கிளை மேலாளரருக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலாளர் என்னை சாட்சியம் அளிக்க அங்கீகாரம் கொடுத்தாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை. மேலே சொன்ன 2 அக்கவுண்டுகளும் Mandate holder ஆப்பரேட் செய்யலாம் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய சம்மனில் Mandate holder பற்றிய விவரங்களை கேட்டுள்ளார்கள் என்றுசொன்னால் சாட்சி சம்மனை பார்த்துவிட்டு ஆமாம் என்று கூறினார். சாசாஆ 1 மற்றும் சாசாஆ 2 ஆவணங்களை பார்த்தால் கணக்கு வைத்திருப்பவரே ஆப்பரேட் செய்யலாமா அல்லது Mandate holder ஆப்பரேட் செய்யலாமா என்ற விவரம் தெரியவராது என்றால் சரிதான். வங்கியின் காசோலை புத்தகம் யார் கணக்கு வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு தான் கொடுப்போம் என்றால் சரிதான். சாசாஆ 1 மற்றும் சாசாஆ 2 ல் அக்கவுண்ட் யார் வைத்திருக்கிறார்களோ அவர்களே காசோலை கொடுத்து பணத்தை எடுத்ததாக தெரிய வருகிறது என்று சொன்னால் சரிதான். சாசாஆ 1 மற்றும் சாசாஆ 2 படி Mandate holder பணம் எடுத்தார் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வங்கியினுடைய ஆவணங்களை பார்க்காமலேயே நான் முதன்மை விசாரணை சங்கதிகளை வாதி கேட்டு கொண்டதற்கிணங்க தவறாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.